காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இரண்டாம்கட்டளை ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் சாந்ததேவி சுகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

4 ஆண்டுகளில் 36 அரசு கலைக் கல்லூரிகளைத் திறந்து

கல்வியின் தேவையை நாட்டுக்குப் பறைசாற்றியவர் நம் முதல்வர்!

மன்னார்குடியில் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் – அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!

மன்னார்குடி, ஆக.7–

"நான்காண்டுகளில் 36 அரசு கலைக் கல்லூரிகளைத் திறந்து கல்வியின் தேவையை நாட்டுக்குப் பறைசாற்றியவர் நம் முதல்வர் என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள மன்னை இராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரியின் 39வது பட்டமளிப்பு விழா நேற்று (06.08.2025) நடைபெற்றது. இவ்விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்று மாணாக்கர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது

மன்னார்குடியில் கல்லூரி இல்லாத குறையினைப் போக்கிடும் வகையில் முன்னாள் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களின் பெருமுயற்சியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1971ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. முத்தமிழிறிஞர் கலைஞர் வழியில் தளபதி முதல்வர் அவர்களும், மன்னை மக்களின் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மூலம் அறிந்து மன்னார்குடியில் மகளிர் கல்லூரி அமைக்கப்படும் என அறிவித்து அதற்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

நான்கு ஆண்டுகளில் 36 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திறந்து கல்வியின் தேவையினை நாட்டுக்கு பறைசாற்றியவர் தமிழ்நாடு முதலமைச்சர் .

இக்கல்லூரியில் 4,587 மாணாக்கர்கள் பயிற்று வருகின்றனர். தற்போது இந்த பட்டமளிப்பு விழாவில் 3,139 மாணாக்கர்கள் பட்டம் பெற இருக்கின்றனர். இதில் மாணவியர்கள் மட்டும் 77.5% ஆகும்.

அடுப்பு ஊதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு? என்ற காலம் போய்விட்டது. சட்டங்கள் செய்யவும், பட்டங்கள் ஆளவும் இன்று பாரினில் பெண்கள் வந்துவிட்டனர். இதற்கு யார் காரணம்? தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞருமே இந்தப் பெண் விடுதலை உயர்வுக்குக் காரணம். குடும்பத்தையே பல்கலைக்கழகமாக நடத்தும் திறமை பெற்ற பெண்ணால் பொது வாழ்விலும் சமுதாயத்திலும் வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான், இக்கல்லூரியில் பட்டம் பெறும் மாணவியர்களின் எண்ணிக்கை உள்ளது.

1,370 மாணவியர் முதல் தலைமுறை பட்டதாரிகள். இத்தகைய பின்புலம் இருக்கும் மாணவியர் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கிறது. இதற்கு துணையாக இருந்த அவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் உயர்கல்வி பெற எந்த தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக "புதுமைப்பெண்" கொண்டுவந்தார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர். அது போல் மாணவிகள் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பினைப் பெறவும் தொழில் முனைவோராக திகழவும் "நான் முதல்வன்" என்ற முத்தான திட்டத்தினை வழங்கினார்கள். வருடத்திற்கு 10 இலட்சம் மாணாக்கர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கதோடு தொடங்கப்பட்டது. ஆனால் மூன்று ஆண்டுகளில் 41 இலட்சம் மாணாக்கர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலான மாணவ, மாணவிகள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும். பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியை இளங்கலை படிப்பிற்கே கியூட் போன்ற நுழைவுத் தேர்வுகள் மூலம் ஏழை, எளிய மாணாக்கர்களின் உயர்கல்வி கனவை பறிக்க முயல்கிறது ஒன்றிய அரசு.

(CUET) நுழைவுத் தேர்வை மட்டுமே வைத்து மாணாக்கர்கள் தரத்தை முடிவு செய்வது என்பது முற்றிலும் நயவஞ்சகமானது. இந்திய முழுவதும் ஒரே பாடத்திட்டம் இல்லாதபோது இந்தியாவிற்கான பொது நுழைவுத் தேர்வு என்பது சாத்தியமற்றது. நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் வணிக ரீதியாகவே செயல்பட்டு, மாணாக்கர்களிடம் பணத்தை பறிப்பதற்காகவே உள்ளன.

3,5,8 வகுப்பு மாணாக்கர்களுக்கு பொதுத் தேர்வு என்பது இடைநிற்றலையே ஏற்படுத்தும். தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணாக்கர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

நீங்கள் படித்த படிப்பை சரியான சமயத்தில், சரியான முறையில் பயன்படுத்துவதில் தான் உங்கள் வெற்றியும் எதிர்கால இந்தியாவின் வெற்றியும் மனித குலத்தின் வெற்றியும் அமைந்திருக்கின்றது. இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளை முழக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசினார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியம் அக்கூர் ஊராட்சியில் உள்ள நத்தம் ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, கலந்துக் கொண்டு குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம் என 46 அரசு சேவைகளுக்கு பொதுமக்கள் மனு அளித்ததும் உடனடியாக , நத்தம் பட்டா, கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு உள்ளிட்டவைகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன் திருத்தணி வட்டாட்சியர் மலர்விழி, நிர்வாகிகள் அக்கூர் மாணிக்கம், டில்லி பாபு, ஹரிபாபு, கோவேந்தன்,மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

உலகெங்கும் கலைஞர் புகழ்!

அய்யா கலைஞரே
நினைக்காமல்
இருப்பதில்லை!
உன் நினைவைத் தவிர
வேறு நினைவில்லை !

படித்துபாதியில்
நிறுத்திய நூல்கள்
உன் கண்களைத்
தேடுகிறது !

சலவைக்கு
சென்ற
வேட்டியும் சட்டையும்
உடுத்துவாய் என்று
உன்னைத் தேடுகிறது!

ரேகைகளை
உள்வாங்கிய
அறிவாலயம்
உன் பாதங்களைத்
தேடுகிறது !

அலைகள்
கைகளைத்தட்டி
செல்கிறது
கல்லறைக்குள்ளும்
கவிதைப் பேசுகிறாய் !

அணைந்தப் பிறகும்
முரசொலியில்
நெருப்பு
வீசுகிறாய் !

திரைப்பட
நட்சத்திரங்கள்
மயங்கும்
மந்திரப் புன்னகை !

இளமைப் பலி
முதல்
ஒவ்வொரு
படைப்பும்
பொன் நகை !

தமிழின்
ஊர்வலமே.!
தத்துவத்தின்
நகர்வலமே.!

பொய் வழக்குகள்
உன் கை விரல்களை
நட்டை எடுத்தது !

அடக்கு முறையும்
சிறையும்
உன்னிடம் தேநீர் குடித்தது!

ஈரோட்டு
தீயின் சிறகே!
காஞ்சியின்
கருணைப் படகே !

எழுதவா
எழுந்து வா
என்று
தேடுகிறது உன் பேனா !

இறந்தப் பிறகு
உன்னிடம் மோதியவன்
ஆணா !

இறந்தப் பிறகும்
எதிரிகளைக் கதறவிட்டு
வென்றாய் ஆனா !

மொத்தப்பகைவரை
உன் ஒத்த மகன்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெல்லுகிறார் !

அய்யா கலைஞரே
ஒன்றியமெங்கும்
உன் புகழை
சொல்லுகிறார் !

ஆதிக்கச் சாதியிடம்
குனியாத
மு.க. ஸ்டாலினுக்கு
நிகர் எவர் !

எவரும் தொட முடியாத
அணுமின்
நிலையத்தின்
பவர் அவர் !

தலைவா
நினைவு நாளில்
தலைவரோடும்
உன் பேரனோடும்
நின்று
வணங்குகிறோம் !

உன்னோடு
வாழ்ந்த நாட்களுக்கு
பூக்களைத்
தூவுகிறோம்!

ஈரோடு இறைவன்
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7 ஆவது நினைவு நாள்!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று அமைதிப் பேரணி!

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.7–

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு .

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு இயக்கத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்த, முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, ஆகஸ்ட் 7 வியாழக்கிழமை அன்று காலை 7 மணிக்கு, சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அஞ்சலி செலுத்த உள்ளார்.

இந்நிகழ்விற்கு கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ அவர்களின் ஆலோசனையின்படி, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட வட்டச்செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக தொழில் நுட்ப அணி உறுப்பினர்கள், பாக இளைஞரணி உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் செயல் வீரர்கள் என அனைவரும் அலைகடலென திரண்டு வந்து, முத்தமிழறிஞர் ஐயா கலைஞருக்கு நினைவஞ்சலி செலுத்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

இன்று 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக.8–

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (07.08.2025) தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு–42ல் இளையா தெருவில் உள்ள கே.சி.எஸ். நாடார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராயபுரம் மண்டலம், வார்டு–51ல் காளிங்கராயன் தெருவில் உள்ள அண்ணா திருமண மண்டபம், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–73ல் ஸ்டாரஹன்ஸ் சாலையில் உள்ள திரு.வி.க.நகர் மண்டல அலுவலகம், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120ல் வி.பி. ராமன் சாலை, லாயட்ஸ் காலனியில் உள்ள ஐ.டி.ஐ. கல்லூரி, அடையாறு மண்டலம், வார்டு–172ல் நெடுஞ்செழியன் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு–200, செம்மஞ்சேரி, பழத்தோட்டச் சாலையில் உள்ள மாநகராட்சி சமூகநலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மயிலை கிழக்கு பகுதி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் பேரணி!

பகுதிச் செயலாளர் எஸ். முரளி வேண்டுகோள்!

சென்னை, ஆக 7–

மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி வேண்டுகோள் வருமாறு

மயிலை கிழக்கு பகுதி கழகத் தோழர்கள் கவனத்திற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர்கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (07.08.2025 - வியாழக்கிழமை) அமைதிப் பேரணி நடைபெறுகிறது.

இப்பேரணியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி, மாவட்டக்கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. அவர்களின் ஆலோசனைபடி மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த வட்டக் கழக செயலாளர்கள் காலை 7 மணி அளவில் அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு தாங்கள் வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு காலை 10 மணி அளவில் மலர் அஞ்சலி செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட பகுதி நிர்வாகிகள்.வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் அணிகளின் அமைப்பாளர் துனை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி கேட்டுக் கொண்டுள்ளார்.

தி.மு.க. அயலக அணி

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சாதிக் காதர் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **மீ.சபீக்,** (0/3, 21ஏ, 3வது வலது தெரு, அல்–அமீன் நகர், வட்டவிளை சாலை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 06–08–2025.

எம்.எம். அப்துல்லா,
செயலாளர்,
தி.மு.க. அயலக அணி

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் பாகம் எண் 164 வட பெரும்பாக்கம் ஒற்றவாடை தெருவில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில்,வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, பாக முகவர் டி. திவாகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பி. செந்தில், வக்கீல் எம்.என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.